<u>தொழிலாளர் நீதிமன்றம். காஞ்சிபுரம்</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **ID.No.** | **:** | 2/2024 | சாட்சியம் | **:** | **WW1** |
| **Name** | **:** | திருமதி.சாந்தி | | | |
| **Date** | **:** | **22.07.2025** | | | |
| **Time** | **:** | **11.33 a.m to 11.45 a.m** | | | |

<u>தொ.த.சா.1.திருமதி.சாந்தி என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். குறுக்கு விசாரணை</u>

என்னிடம் காட்டப்படும் ராஜினாமா கடிதத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதா என்றால் ஆமாம். ஆனால் அந்த கையொப்பத்தை நான்கு பேர் என்னை மிரட்டி வாங்கினார்கள். 05.01.2023 தேதியிட்ட அந்த கடிதத்தில் உள்ள கையொப்பம் என்னிடம் பூர்த்தி செய்யப்படாத வெள்ளை பேப்பரில் பெறப்பட்டது. அது நி.சா.ஆ.1. நான் எதிர்மனுதாரர் நிறுவனத்தின் நிரந்தர பணியாளரா என்றால் ஆமாம். அதற்கு உத்தரவு எதுவும் வழங்கப்பட்டதா என்றால் இல்லை அடையாள அட்டை மட்டும் வழங்கப்பட்டது. அம்பத்தூரில் உள்ள ACL கம்பெனியில் நான் மொத்தம் 14 ஆண்டுகள் வேலை பார்த்தேன் அந்த கம்பெனியில் வேலை பார்த்த போது எனக்கு கிடைத்த சம்பளம் எவ்வளவு என்றால் அது பீஸ் ரேட்டில் கொடுக்கப்படும் எவ்வளவு தைத்து கொடுக்கிறேனோ அதற்கு தகுந்தார் போல மாதம் ஒன்றிக்கு 17 ஆயிரத்திலிருந்து 18 ஆயிரம் வரை

கிடைத்துக் கொண்டு இருந்தது. ACL கம்பெனி அம்பத்தூரில் நிரந்தர பணியாளராக வேலை பார்த்தேனா என்றால் ஆமாம். எதிர்மனுதாரர் நிறுவனத்தில் எனக்கு எவ்வளவு சம்பளம் வழங்கப்பட்டது என்றால் 14,000 கொடுப்பதாக சொல்லிவிட்டு மாதம் ஒன்றிற்கு 11 ஆயிரம் மட்டுமே கொடுத்தார்கள். எதிர்மனுதாரர் நிறுவனத்தில் வேலை செய்யும் 80% பெண்களுக்கு என்னை போன்ற பிரச்சனை எதுவும் உள்ளதா என்றால் தெரியவில்லை. நான் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் யார் மூலமாக வேலைக்கு சேர்ந்தேன் என்றால் அந்த நிறுவனத்தில் HR ஆக இருந்த திலீப் என்பவர் மூலமாக சேர்ந்தேன். அவர் தான் என்னை நேர்காணல் செய்தார் என்றால் ஆமாம். திலீப் என்பவர் தான் நேர்காணல் செய்தார் திருவேங்கடம் என்பவரிடம் என்னை ஒப்படைத்தார்கள் அவர் தான் என்னை நிறுவனத்தின் உள்ளே சென்று வேலை செய்ய உத்தரவு இட்டார்.

தொடர்ச்சி வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது.

S SUJATHA

Presiding Officer, Labour Court
Digitally signed by S SUJATHA
Location: Kancheepuram
Date: 2025.07.22 13:35:17 +0530

Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:22.07.2025.